இரண்டொரு மாதங்களுக்கு முன்னர், ஆங்கிலோ இந்திய மதுவிலக்குச் சங்கத் தலைவர் சர் ஹெர்பர்ட் ரூபர்ட்ஸனும் அவர் பத்தினியும் லண்டனிலுள்ள இந்திய மாணவர்களைத் தமது கிருகத்துக் கழைத்து உபசரித்த சமயத்தில், இந்திய வைத்திய இலாகாவில் அநேக வருஷகாலம் ஊழியம் புரிந்து இப்போது லண்டனிலிருக்கிற டாக்டர் ஒகர்மன் என்பவர் "சன்மார்க்க நடத்தையும் வெறியூட்டும் வஸ்துக்களும்" என்கிற விஷயத்தின்மேல் அவர்களுக்கோர் அருமையான உபந்நியாசஞ் செய்தார். அவ்வுபந்நியாசம் கேட்டவருள்ளத்தில் நல்லுணர்ச்சியை யுண்டுபண்ணினதன்றி, அநேகரை இனி நல்வழியில் நடத்த ஏதுவாயிருக்கு மென்று நம்பப்படுகிறது. மேலும் உபந்நியாசகர் இந்தியருடைய வாழ்வையும், நன்மையையும் மனதில் வைத்துப் பேசியிருக்கிறார். ஆகையால் அது இங்குள்ள நம்மெல்லாருக்குங்கூட நன்மை பயக்கக்கூடியதென்று கருதி இவ்விடத்தில் சங்க்ஷேபமாய்த் தெரிவிக்க விரும்புகிறோம். உபந்நியாசகர் தமது பிரசங்க ஆரம்பத்தில், சன்மார்க்க நடத்தையை உருவப்படுத்தும் அனுகுணங்கள் மூன்று உண்டு என்று சொன்னார். அவையாவன: குலாசாரம், வழக்கப் புழக்கம், கல்வி ஆகிய இவைகளே. இவைகள் இதயமாகிய மெழுக்குப் பலகையில் தினந்தோறும்பதிந்துகொண்டேவந்து பிறகுகிராமபோன்என்கிற பிரதியொலியந்திரம் தனக்குள் பதிந்ததை வெளிக்குத் தருவதுபோலப் பிரதிபாதிக்கிறதென்று சொன்னார். பிறகு, நாகரீக உலகம் சத்தியத்துக்காகவும் சன்மார்க்கத்துக்காகவும் போராடுகிறதென்றும், சத்தியமும் சன்மார்க்க நெறியுமே சிறந்த நாகரீகத்தின் குறிகளென்றும், இந்தப் போராட்டத்தில் மேற்சொன்ன ருலாசாரம், வழக்கப்புழக்கம், கல்வி இம்மூன்றும் சம்பந்தப்பட்டு நிற்கிறதென்றும், இந்தச் சம்பந்தம் நம்மை நன்மைக்காவது தீமைக்காவது திருப்பிவிடக் கூடுமாதலால், சத்தியத்தையும் சன்மார்க்க நடத்தையையுங் காத்துக்கொள்ள மேற்படி மூன்றினிடத்திலுமுள்ள தப்பறைகளைக் கண்டிக்கவேண்டியதென்றுஞ்சொல்லிவிட்டு, இந்திய மாணவரைப் பார்த்து அவர் கூறினதாவது:—"உங்களிலநேகர் இத்தப்பறைகளைக் கண்டிக்க முயன்றிருக்கிறீர்கள். நீங்கள் இந்தியாவைவிட்டு யூரோப்புக்கு வந்ததில் வெகுகாலமாய் உங்களைப் பந்தித்திருந்த குலசார பந்தத்தை நிக்ரகித்து வந்திருக்கிறீர்கள். உங்கள் நாட்டை அடிமைப் படுத்தி அநேக கொடுமைகளுக்கு ஆஸ்பதமாயிருக்கிற ஜாதிக் கட்டைத் தளர்த்திக்கொண்டு நீங்கள் வந்திருப்பதிலே வழக்கப் புழக்கமாகிய வேலியையுந் தாண்டி விட்டீர்கள். இங்கே வந்த பிறகு, சத்தியத்துக்கும் ஞானத்துக்

கும் அனுகுணமான அறிவையடைந்துகொள்ளப் பலவித தப்பறைகளைக் கண்டித்துக் கல்வியோடு போர்செய்து வருகிறீர்கள். இந்த மூன்றினிடத்துமிருக்கிற தப்பறைகளைத் தகுந்தபடி சேதித்துத்தள்ளுங் கருவி ஒன்றிருக்கிறது. அதாவது ஜீவிய ஒழுங்குளன்பதே. ஜீவிய ஒழுங்கு என்றாலும் சன்மார்க்க நடத்தை என்றாலும் ஒன்றுதான். ஜீவிய ஒழுங்குடையவன் சன்மார்க்க நடத்தையுடையவன். சன்மார்க்க நடத்தை யுடையவன் யாவன்? தந்திரன், சூதன், எத்தன், இழிஞன் அல்லன்; உன்னத நோக்கமும், மாசற்ற நடத்தையு முடையவனும், நீதியையும் சற்குணத்தையும் விரும்பி வழா நெறியில் நிற்கத் துணிந்தவனுமே யாம். இத்தகைய குணநிசயத்தை அடைந்து கொள்ளும் படியே தற்கால நாகரீகமும் அபிவிர்த்தியும் விரும்புகிறது. இவ்வித குணபாவ மில்லாவிடில் ஒரு தேசம் பாழடைந்து ஜீவித்துப் போகும். சன்மார்க்க நடைத்தையின் அளவுக்குத் தக்கவாறுதான் ஒரு தேசத்தின் ஜனக்கட்டும் செல்வாக்கும் ஓங்கும். தேசமென்பதென்ன? அநேக ஜனங்களுடைய ஒரு பெரிய குடும்பம். ஒவ்வொரு தனியாளும் எவ்வித குணபாவம் படைத்தவனா யிருக்கிறானோ அதற்குத் தக்கவாறுதான் அத்தேசமிருக்கும். ஆகையால் ஒவ்வொரு மனுஷனும் தன் தேசத்தின் உயர்வுக்குப் பொறுப்பாளியா யிருக்கிறான். கனவான்களே, இந்தியாவின் செல்வச் செழிப்புக்கும், சன்மார்க்க அபிவிர்த்திக்கும் பிரஜைகளின் சந்தோஷத்துக்கும் பொறுப்பாளிகள் நீங்களல்லவா?'' என்றிவ்வாறு சொல்லிக்கொண்டே வந்து, இந்தச்சன்மார்க்க நடத்தையானது தலையெடுக்க வொட்டாதபடி இதை ஹதம் பண்ணுகிற எது என்னவென்பதைக் குறித்து அவர் சொன்னது: ''தினந்தோறும் சன்மார்க்க நடத்தையை ஹதம் பண்ணி அதன் அஸ்திபாரத்தைக் குலைத்து நாகரீக மென்கிற உன்னத மாளிகையைத் தலைகீழுறச் செய்கிற பொல்லாத எதுக்களில் வெறியூட்டும் வஸ்துக்களைப் போன்ற பயங்கர பொருள் வேறொன்றில்லை. மிருத்துக்குச் சமானமான வெறியூட்டும் விஷ வஸ்துக்கள் உலகத்தில் எந்தப்பொருளையும் விடதாராளமாய் சர்வத்திராளாலும் உபயோகிக்கப் படுகின்றன; ஆனால் அவைகளே எந்தப்பொருளையும் விட தீமையுண்டாக்கக் கூடியனவாயிருக்கின்றன. அவை ஏன் இவ்வளவு கொடுமைநிறைந்திருக்கின்றன?'' என்று கூறிச் சாஸ்திரோக்தமாய்ப் பலவிதநியாயங்களை யெடுத்துக்காட்டி வெறியூட்டும் வஸ்து ஒவ்வொன்றின் கெடுதியையும் வெள்ளிடைமலைபோல் வியக்தமாய் வெளிப்படுத்தினர். வெறியூட்டும் வஸ்துக்களுக்கு விஷத்திரட்சி யென்று பெயர்சொன்னார். சாராயமோ, அபினோ, புகையிலையோ இவையெல்லாம் விஷமே என்றார். மட்டாய் சாராயமருந்துகிறவர் மட்டாய் விஷத்தை யருந்தி வருகிறார்களென்றார். மதுபானத்துக்கு இருகுணங்களுண்டு. ஒன்று உற்சாகப்படுத்துவது, இன்னொன்று கிளறிவிடுவது. பிற்கூறிய செயலே மிகுதியாதலால் தேகத்தினை அதி சீக்கிரம் கிளறி முறித்துவிடுகிறது. மதுபானத்தால் புத்திக்குண்டாகிற கெடுதி சொல்வதற்கெளிதன்று. மதுபான பரிசீலனைசெய்த ஆயுள்வேதபண்டிதர் பயங்கரமாயிதைப்பற்றிச் சொல்லுகிறார்கள். சுய புத்தியையும், சுய ஆளுகையையும் இது அழித்துவிடுகிறது. பகுத்தறிவையும், சுயாதீன சித்தத்தையும் ஒழிக்கிறது. குடியன் மதியீனனும் உன்மத்தனுமாகிறான். கொஞ்சங் குடிக்கிறவனுடைய நிலைமையும் இதுவே. இதனால் துன்பத்தை மறக்கும் ஒரு குணமிருக்கிறதென்று பலர் சொல்லலாம். ஆனால் அதனால் உண்டாகிற குணத்தை விட பிரதிகூலம் நூறுமடங்காயிருக்கிறது. வறுமையும், கொடுமையும், பாவமும், பழியும் விளைவதோடு, எக்காலும் நரக பிராப்தத்துக்குரிய மரண நிலைமையும் விளைகிறது'' என்று சொன்னார். இவ்விதம் வெகு விஸ்தாரமாய் அதன் கேட்டை யெடுத்துக்கூறி, உலகத்தின் நாகரீக தேசங்களிலெல்லாம் இக்குடிவெறி பரவியிருப்பதால் நாம் மயங்கக்கூடாதென்றும், அங்கங்கும் இந்தச் சாபத்தை நீக்குமுயற்சி பலமாய் நடந்தேறிவருகிறதென்றும், நீங்களும் இந்தியாவுக்குத் திரும்பிப் போனபிறகு இதற்காக முயன்று உழைக்கவேண்டுமென்றும் பலவித நற்புத்திகூறிப் பிரசங்கத்தை முடித்தார். இந்த உபந்நியாசம் இங்கிலாந்திலுள்ள இந்திய மாணவர் மனதில் மாத்திரமல்ல, இங்குள்ள படித்த இந்தியர் மனதிலும் நன்றாய் அழுந்தி நன்மை பயக்குமென்று விரும்புகிறோம். டாக்டர் ஒகர்மன் அவர்களுக்கு இந்தியர் நன்றி செலுத்தக் கடமைப் பட்டிருக்கிறார்கள்

Strong Drink and Insanity.

மதுபானமும், பைத்தியமும்.

பலவருஷ காலமாய் மதுபானம் தரித்திரத்துக்கும் குற்றங்களுக்கும் முக்கியகாரணமாக எண்பிக்கப் பட்டுவருகிறது. எட்டு வருஷங்களுக்கு முன்னர் டாக்டர் கிளவ்ஸ்டன் என்கிற பண்டிதர், அது தரித்திரத்துக்கும் குற்றங்களுக்கு மாத்திர மன்று; பைத்தியத்துக்கும் அதி முக்கிய காரணமாயிருக்கிற தென்று ரூபித்துக் காட்டினர். 1903ஷ ராயல் எடின்பரோ வைத்திய சாலை காரிய நிருவாக சங்கத்தாருக்கு அவர் கொடுத்த அறிக்கையில் அதைக் குறித்துச் சொன்ன தென்ன வெனில், "மதுபானத்தால் உண்டாகும் பைத்தியம் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. இந்த வருஷம் புருஷரில் நூற்றுக்கு 42-பேரும், ஸ்திரீகளில் நூற்றுக்கு 18 பேரும் மதுபானத்தால் பைத்திய ரோகம் அடைந்திருக்கிறார்கள். 30 வருஷங்களுக்கு முன்னே அந்த விகிதம் நூற்றுக்கு 18-ம், 10-ம் ஆகமாத்திரமிருந்தது. இப்போது இருமடங்காய் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம் சில வகுப்பு ஜனங்களுக்குள்ளே குடி அதிகரித்திருப்பதே யொழிய மற்றப்படி யன்று. அதிகக் குடியினாலே அநேகம் பேர் தங்கள் சொஸ்த புத்தியை யிழந்துகொண்டு வருகின்றனர்" என்று சொல்லி வேறு இடங்களிலும் இதே போல பைத்தியரோகம் அதிகப்பட்டு வருகிற தென்பதற்கு ஆதாரங் காண்பித்தார். கிம்பிலின் என்கிற பண்டிதர் ஜெர்மனியில் குடிகாரப் பெற்றோ ரடங்கிய 29 குடும்பங்களைப் பரிசோதனை செய்து பார்த்ததில் அக்குடும்பங்களில் 33 பிள்ளைகள் மரித்துப் பிறந்தன வென்றும், உயிரோடு பிறந்த 183 பிள்ளைகளில் 60 முதல் வருஷமே மரித்தன வென்றும், 58 இன்னும் உயிரோடிருந்தும் மந்த புத்தியுடையனவாயிருக்கின்றனவென்றும், 35 பலவீனமும் பைத்தியமு முடையதாயிருக்கின்ற தென்றும், 8க்கு வலி வருகிறதென்றும், 12 நோய்ந்ததாயிருக்கிற தென்றும், 3 புத்தியற்றதாயிருக்கிற தென்றும், 183 பிள்ளைகளில் சொஸ்த புத்தியுடையன 28 மாத்திர மென்றும் கண்டறிந்தா ரென்று கூறிப் பிற் கூறிய வண்ணம் தமது முடிவான அபிப்பிராயத்தை வெளியிட்டார்:—புத்தியைப் பரிசோதிக்கும் ஆயுள் வேதப்பண்டிதர் காண்கிறபடி மதுபானம் புத்திக்கு மிதமிஞ்சின கேட்டையுண்டாக்குகிறது. எந்தச் சரீர நோயும், எந்தக் குடும்ப அழிவும், எந்த ஜனசமூக விபத்தும் புத்தியழிவுக் கொப்பான தீமையுள்ளதன்று. மிஞ்சின குடிகாரன் ஒவ்வொருவனுக்கும் மூளைக்கு நாசமும், புத்திக்கு மந்தமும், வேலை செய்யுந் திராணிக்குக் குறைவும் உண்டாகிற தென்பது நிச்சயம்."

இவ்வித அபிப்பிராயத்தை இவர் வெளியிட்டது முதற்கொண்டு காலத்துக் காலம் பல பண்டிதர்கள் அதை ஊர்ச்சிதப் படுத்திக்கொண்டே வருகிறார்கள். இரண்டொரு வாரங்களுக்கு முந்தி ரென்புருஷயர் பைத்தியக்காரர் வைத்தியசாலை அதிபர் டாக்டர் ரூபர்ட் ஹாச்சிஸ் பண்டிதர் வெளியிட்ட வருஷாந்தர அறிக்கையில் பைத்தியத்துக்கு மதுபானமே முக்கிய காரணமென்று ரூபிக்கப்பட்டிருக்கிறது. ஒரு வருஷத்தில் அந்த வைத்தியசாலைக்குக் கொண்டுவரப்பட்ட பைத்தியக்காரர் தொகை 309. இவர்களில் 216 பேர் வேறு வைத்தியசாலைகளிலிருந்து அனுப்பப்பட்டார்கள். இவர்களுடைய முந்தின நிலைமையைக் கண்டறிவது கஷ்டமாயிருப்பினும், மற்ற 93 பேரில் பெரும்பாலார் மதுபானத்தால் அவ்வியாதிக் குள்ளானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இது தவிர, இன்னிஸ்கார்த்தி பைத்தியக்கார வைத்திய சாலைத் தலைவர் டாக்டர் டிரேப்ஸ் பண்டிதர் வெளியிட்டிருக்கிற சென்ற வருஷத்து அறிக்கையில், அவருடைய வைத்திய சாலையிலிருக்கிற நோயாளிகளில் நூற்றுக்கு 49 பேர் குடியினால் பைத்தியங் கொண்டார்களென்று தெரிவிக்கிறார். இவருடைய அறிக்கையில் காணப்படுகிற ஒரு நூதனமென்னவெனில், குடி ஸ்திரீகள் புத்தியை அதிகமாய்க் கெடுக்கிறதில்லையென்பதே. புருஷர்களில் அரை வாசிப்பேர் குடியினால் பைத்தியக்காரரானார்கள். ஸ்திரீகளில் நூற்றுக்கு 5 பேர் மாத்திரமானார்கள் என்னப்படுகிறது. இந்த விதமாக மதுபானம் தேசத்தில் துன்மார்க்கத்தையும், தரித்திரத்தையும், அழிவையும் உண்டாக்கி வருவதோடு மனிதருடைய புத்தியை அழித்துப் பைத்தியக்கார ஆஸ்பத்திரிகளை ரோகஸ்தரால் நிரப்பிக்கொண்டு வருகிறதென்று ஆயுள்வேதப் பண்டிதர்களெல்லாரும் பகிரங்கமாய் வெளியிட்டு வருகிறார்கள். விளக்கைப் பிடித்துக்கொண்டு

கிணற்றி லிறங்கும் மதிகேடனைப் போல பின்னும் இம்மதுவை யருந்தி மதியிழக்கி ன்றார்கள் அநேகர். என்னே இவர் மதி!

Correspondence.
கடிதம்.

Strange uses for spirits.
சாராயத்தின் விநோத உபயோகம்.

ஐயா,

சென்ற மாதத்து "மதுவிலக்குத் தூதன்" சஞ்சிகையில் "சாராயத்தின் விநோத உபயோகம்" என்கிற தலைப்பெ யரோடு "டெம்பரென்ஸ் கிரானிகல்" என்னும் பத்திரிகையினின்றெடுத்துப் பிர சுரிக்கப்பட்டிருந்த ஒருவிஷயத்தைக் கண் ணுற்றேன். ஆங்கிலத்தில் பிரசுரமாயிருந்த அவ்விஷயத்தில் தற்காலம் சாராயமானது குடிகாரரின் பானமாயிருப்பதுந் தவிர,தோ ல்பதனிடுவதற்கும், செத்த பிராணிகளைச் சிதையாவண்ணங் காப்பாற்றுவதற்கும், வ ஸ்திரங்களிலுள்ள கறைகளை நீக்குவதற்கும் இன்னுமென்ன பற்பல காரியங்களுக்கு முபயோகமாகிறதென்று எழுதப்பட்டிரு ந்தது. இந்த விநோத உபயோகங்களைக்கு றித்து வாசித்தபொழுது, சமீபகாலத்தில் ஒரு தமிழ்ச்சபை போதகர் கண்டுபிடித்த ஒரு விநோத உபயோகம் எனது ஞாபகத் துக்கு வந்தது. அதை நமது பத்திரிகா நேயர்களறியுமாறு தங்களுக் கெழுதுவது உசிதமென்றுன்னி இந்தக்கடிதத்தை வரை யலுற்றேன்.

ஒருநாள் இரவு 8-மணி நேரத்தில் சபைப்போதகர் ஒருவருடைய பையன், 10 பிராயமுடையவன், சாராயக்கடைக்குப் போய்ச் சாராயத்தை புட்டியில் வாங்கிக் கொண்டு வீட்டுக்குத் திரும்பி வந்தான். வழியில் அவனைச் சந்தித்த அவனுடைய சிநேகிதனொருவன், அவன் பேரைக்சொல் லி "இந்நேரத்தில் எங்கே போய் வருகி றாய்" என்று கேட்டுச் சமீபத்தில் செல்ல, பையன் கையில் சாராயபுட்டி இருக்கிறதே யென்று அஞ்சிப் பின்னிடைந்தான். சிநே கிதன் சமுசயித்து அவன் கையில் மறைத் துக்கொண்டிருந்த சாராயபுட்டியைப் பிடுங்கிக் கொண்டு, போதகரு குச் சாராயமில்லாமல் தூக்கம் வரா துபோலிருக்கிறது" என்று சொல்ல, பையன் "இல்லை; அப்பாவுக்குச் சகிக்கக் கூடாத தலைநோவு வந்துவிட்டது. அதற் காகத் தலையில் போட்டுத் தேய்க்கப் பிரா ந்தி வாங்கி வரச்சொன்னார். வாங்கிக் கொண்டு போகிறேன்" என்றான். அப் போது சிநேகிதன் "உன்னுடைய தகப்ப னார் தலைநோய்க்குத் தேய்க்க நல்ல தை லம் கண்டுபிடித்தார். பாவம் அவர் பா தை எப்படியிருக்கிறதோ? உடனே கொ ண்டுபோய்க் கொடு" என்று சொல்லிப் புட்டியைக் கொடுத்து அவனை அனுப்பி விட்டுத் தன் வழியே சென்றான். இதை அந்தச் சிநேகிதன் என்னிடம்வந்து அறிவித்தான். போதகர் கண்டு பிடித்த இந்த விநோத உபயோகத்தைப் போன்ற அநேக உபயோகங்கள் பலரால் கண்டு பிடிக்கப் பட்டிருக்கலாம். அவைகளைத் தெரிந்த நண்பர்கள் தங்கள் பத்திரிகை யில் எழுதித் தெரியப்படுத்தினால் நலமா யிருக்குமென்று நம்புகிறேன்.

சென்னை,
25—9—.0. } யதார்த்தவாதி.

Drunkenness—Its Evils and Remedies.

மதுபானத்தால் விளையும் கெடுதிகளும் அதை நிவிர்த் திக்கும் வழிவகைகளும்.

(Continued.)

(b) வெளிப்படையாய்க் காணப்படா தக் கெடுதிகள்:—

1. ஜீரணசக்தியைக் குறைத்து போஷ ணம்சங்களைக்கட்டி அஜீரணத்தை உண் டாக்கும். மதுசாரம் முதலாவது வயிற் றில் மந்தத்தை உண்டாக்கிறது. சிலர் ஜீரண சக்தியை உண்டாக்கிறதென்று நம் புகிறார்கள். இதனாலுண்டாகும் பசி ஒரு வித போலி பசியே தவிர நிசமானபசியல்ல. சோதித்துப் பார்க்குமளவில் ஜீரணத்திற் குப்பதிலாக அஜீரணத்தையே உண்டாக்கு கிறது.

2. திரேகத்தில் ஓடிக்கொண்டிருக்கும் சுத்தமான இரத்தத்தைக் கெடுத்துவிடுகி றது. எப்படியெனில் சரீரத்திலுள்ள தண் ணீரை எல்லாம் இழுத்துக்கொள்ளுகிறது. அதனால் குடியருக்கு அதிமான தாக முண் டாகிறது. இதனால் அவர்களுடைய இரத் தம் பலவீனமாயும், பலமில்லாததாயும்

போய்விடுகிறது. அவர்கள் திரேகத்திலி ருக்கும் சுத்தமான காற்றை (பிராண வாயுவை) கெடுத்துப்போடுகிறது. குடியனுடைய சரீரத்தில் ஏதாவது காயமுண்டானால் இரத்தம் வெகு சீக்கிரத்துக்குள்ளாக வெளியேறும்.

3. மூளையைக் கெடுத்துப்போடுகிறது. எப்படியெனில் மதுசாரம் மூளைக்குள் சென்று அதை அதிக விரைவாக வேலை செய்யும்படி செய்கிறது. திருஷ்டாந்தமாக குடியன் குடித்திருக்கும்போது, புத்தி இல்லாதவன்போல் அடிக்கடிபேசி, அதிகமாய் சிரிப்பான். இது எதினால், மூளை அதிக விரைவாக வேலை செய்வதினாலேதான். இதனால் இவனது மனபெலம் கெட்டு, இவனது சுய சித்தத்தை அது ஆட்கொள்ளுகிறது. இவ்விதமாக எண்ணிறந்த, வெளிப்படையாய்க் காணப்படாதக் கெடுதிகளை உண்டாக்கிறது.

(c) இவைகளைவிட அதிக பயங்கரமான கெடுதி.

தேவன் இவனுக்கு தயவாக தந்திருக்கும் சரீரத்தைக் கெடுத்துக்கொள்வதல்லாமல், அதிக சிரேஷ்டப் பொருளாகிய, ஆத்துமாவையும் கெடுத்துக் கொள்ளுகிறான். அதினால் மோட்ச பேரின்பத்துக்குப்பதிலாக, நரக வேதனையை என்றும் அனுபவிக்கிறான். இது யகாப் பயங்கரமான கெடுதி.

2. நிவிர்த்திக்கும் வழிவகைகள்:—

(a) கிரீஸ் தேசத்தில் குடியர்கள் குடியாமலிருக்க அனுசரிக்கும் வழியாதெனில் தங்கள் வீடுகளில் வளர்க்கிற குரங்கு முதலிய மிருகங்களுக்கு பிராந்தி அல்லது சாராயம் இன்னும் இப்படி போதையைக் கொடுக்கும்படியான வஸ்துக்களைக் கொடுத்து அவைகள் படும்பாதைகளை கண்ணுறச் செய்து இவ்விதமே குடியர்கள் குடித்திருக்கும் காலத்தில் படும்பாடுகளை விஸ்தரிக்கிறார்கள். இவ்விதமுறையை இங்கே கையாடினால் ஒருவாறு குடி நிற்கலாம்.

(b) இது மாத்திரமின்றி, குடியர்களை சிறைச் சாலைக்கு அழைத்துக்கொண்டு போய், அவ்விடத்தில் குடியினால் வந்திருக்கும் ஆட்களை நேரேகாண்பித்து அதனாலுண்டாகிற நஷ்டத்தையும் அவமானத்தையும் எடுத்துரைக்கிறார்கள். ஆகவே இந்த முறையையும் இங்கே கையாடினால் மெத்த நன்மை உண்டாகுவதுமன்றி குடியர்கள் குடியாமலிருக்கச் செய்யலாம்.

(c) ஜப்பானில் ஜனங்கள் குடியாமலிருக்க கையாடுமுறை:—ரொட்டி (Bread)யை, பிராந்தி அல்லது சாராயம் முதலான போதைதரும் வஸ்துவில் நன்றாக ஊறவைத்து, குடியர்களுக்கு கொடுக்கிறார்கள். இப்படிக் கொடுத்துக் கொண்டுவரவே, குடியர்கள் கொஞ்சம் கொஞ்சமாக குடியைவிட்டு விடுகிறார்கள். இந்த முறையையும் கையாடினால் ஒருவாறு குடியை நிவிர்த்திக்கலாகும்.

(d) ஜனங்கள் முதலிலே பெரிய குடிகாரராகிறதில்லை. படிபடியாகவே இந்த நிலைமைக்கு வந்துவிடுகிறார்கள். ஆகையால் இப்பேர்ப்பட்டக் கூட்டத்தில், கூடாமலிருக்கவும், இனி நேரிடப்போகிற கஷ்ட நஷ்டங்களையும், அவமானத்தையும் இவர்களுக்கு எடுத்துரைப்பதினாலே குடியர்கள் அதிகரிக்கமாலிருக்க செய்யலாம்.

(e) அநேகர் கொஞ்சமாகவே குடித்துக்கொள்வோமென்று சொல்லி, கடைசியாக அதை வெல்லமுடியாமல் பெரும் குடியர்களாகி விடுகிறார்கள். ஆகையால் அப்பேர்ப்பட்டவர்கள் அந்த ஆரம்பிக்கும்போதே "குடிக்க ஆரம்பிக்காதே" என்னும் கட்டளையை கைக்கொள்ளச் செய்ய வேண்டும்.

(f) மதுபானத்திற்கு இதுவரைக்கும் அடிமை பட்டிருக்கிறவர்களுக்கு அந்தப் பழக்கத்திலிருந்து தப்பிக்கொள்வதற்கு தேவனுடைய பரிசுத்த சுவிசேஷத்தில் ஒரு கிருபையின் சத்திய வழிகாண்பிக்கப் பட்டிருக்கிறது. குடிக்கமாட்டேன் என்று எழுத்து மூலமாய் செய்யும் உடன்படிக்கைகள் பிரயோஜனமுள்ளதாயிருந்தும், ஏசு கிறிஸ்து நம்மை ரட்சித்து, மறுபடியும்பாவத்தில் விழாமல் நம்மை பாதுகாக்க வல்லவராயிருக்கிறார் என்ற சத்தியத்தை விசுவாசித்து அதற்கேற்க நடந்தாலொழிய நாம் அவ்வுடன் படிக்கைகளை கைகொள்வது கூடாதகாரியம்.

"அவர் தம்முடைய ஜனங்களை அவர்களுடைய பாவத்திலிருந்து இரட்சிப்பார்."

S. D. SAMUEL.

The Book Review.

DONATIOS–THE BOY PREACHER.

டொனேஷஸ் என்னும் பாலிய பிரசங்கி

இத்தலைப் பெயருடைய அருமையான சிறுபுத்தகமொன்று அதன் ஆசிரியர் கனம் Y. G. பானல் அவர்களிடமிருந்து வந்தனத்துடன் வரப்பெற்றோம். இப்புத்தகம் எட்டுப் பிராயத்தில் மரித்துப் போன அவருடைய கனிஷ்ட குமாரன் டொனேஷஸ் என்பவனுடைய அற்புதமானஜீவியசரித்திரமடங்கியது. இது "யாரையாவது இயேசுவிடம் நடத்துங் கருவியாயிருக்கும் என்றகருத்துடன் எழுதப்பட்டிருக்கிறது" என்று இதன் முகவுரையில் சொல்லப்பட்டிருப்பதால் இதனை நாம் கருத்தாய்வாசித்துப்பார்த்தோம். பார்த்த அளவில் எமக்குண்டான உவகைக்குந் திருப்திக்குங்குறைவில்லை. இச்சிறுசரித்திரம் ஒரு உத்தம கிறிஸ்தவபிள்ளை தேவகிருபையிலும் மனுஷர் தயவிலும் எப்படி வளரக்கூடுமென்பதற்கும், பத்தியுள்ள கிறிஸ்தவ பெற்றோர் தம்பிள்ளைகளைப்பக்தியில் எல்வாறு வளர்க்கக்கூடுமென்பதற்கும் ஏற்ற திருஷ்டாந்தமென்றறிய வந்தோம். டொனேஷஸ் சரித்திரம் அதிசயமானது. அவன் மிகச் சிறுவனாயிருக்கும்போதே ஜெபவாஞ்சை யுடையவனா யிருந்தான். ஆறு பிராயத்தில் கேட்டோர் ஆனந்திக்கக் கூடிய சிறு பிரசங்கியாயிருந்தான். அந்த வயதில் ஓய்வுநாள் வகுப்பில் முப்பது பிள்ளைகளை வைத்து வேதபாடங் கற்றுக் கொடுத்து வந்தான். அவனுடைய குணலக்ஷணங்களும் நடத்தையும் பார்த்தவரைப் பரவசப்படுத்தினது. கடைசியில் மரணப்படுக்கையில் உத்தம விசுவாசிகளுக்கு மில்லாத சமாதானமான முடிவையடைந்தான். அவனுடைய அரிய சிறிய சரித்திரம் அநேகரைக் கிறிஸ்துவின் திருவடிகளுக்கு வழிநடத்தக்கூடுமென்று திடமாய்ச் சொல்லுவோம். இப் புஸ்தகத்தை வாசிக்கையில் சகல கிறிஸ்தவ பிள்ளைகளும் இப்பிள்ளையைப் போலவும், எல்லாக் கிறிஸ்தவ பெற்றோரும் தாயற்ற இப்பிள்ளையை வளர்த்த தந்தையைப் போலவும் மாறிவிட்டால் எவ்வளவு சிலாக்கியமாயிருக்குமென்கிற எண்ணம் எமக்குள் வந்தது. எல்லாக் கிறிஸ்தவ நண்பர்களும் இச்சிறுநூலை வாங்கி வாசிப்பார்களென்று நம்புகிறோம். இதன் விலை பிரதிக்கு அரை அணா. 12 பிரதிகள் 8 அணா. வேண்டுவோர், சென்னை. இராயபுரம் "பாரடைஸ் லாட்ஜ்" கனம் Y. G. பானல் P. B. அவர்களுக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

Temperance Notes.

மதுவிலக்குக் குறிப்புகள்

250 More Bar Rooms Closed in Canada:—கன்னடாவின் பலபாகங்களில் மதுவிலக்கு சங்கத்தார் செய்து வரும் வேலைமுயற்சியால் இன்னும் 200 சாராயக் கடைகள் சாத்தப்பட்டு விட்டதாக தெரியவருகிறது. கூடிய சீக்கிரத்தில் சாராயக்கடைகளுக்குக் கொடுக்கப் படுகிற லைசென்ஸ்களில் அநேகம் அடித்துவிடப்படுமெனக் கேள்விப்படுகிறோம்.

Alcohol neither Food nor Medicine, always a Poison:—"மதுபானம் ஆகாரமுமல்ல மருந்துமல்ல எக்காலத்தும் நஞ்சு" என்கிற தலைப்பையுடைய ஒரு பேப்பர் பால்ற்றிமோர் ஆப்கின் ஆஸ்பத்திரி தலைவர் டாக்டர் ஆவர்ட்டு கெல்லி என்பவரால் சிலதினங்களுக்கு முன் வாசிக்கப்பட்டது. அபபத்திரிகையில் மதுபானத்தில் போஷிப்பைக் கொடுக்கக்கூடிய சத்து சிறிதும் இல்லை என்றும், உள்ள பலத்தையும் குறைக்கக்கூடிய வெறுக்கப் படத்தக்க வஸ்து என்றும், மருந்தாகவும் உபயோகிக்கக் கூடாத நஞ்சு என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. ஜனங்களுடைய நன்மைக்காக அதை முற்றுமாய்த் தள்ளிவிடவேண்டுமென்றும் மனுக்குலத்தாரில் ஒருவனாவது தன் சொந்த சந்தோஷத்தைக் கருதியாவது மற்றவர்களைப் பிரியப்படுத்தவாவது கொஞ்சமென்கிலும் அதிகமென்கிலும் அதை உபயோகிக்கக் கூடாதென்றும், அதனால் உண்டாகிற அனர்த்தத்துக்குக் குறைவில்லை என்றும் மிகவும் பலமான வார்த்தைகளினால் அப்பத்திரிகையில் விளக்கினார்.

Temperance in Mysore:—மைசூரில் ரெசிடென்டாக இருந்த ஆனரபில் மிஸ்டர் பிரேசர் அவ்விடத்தை விட்டுப்போகுமுந்தி குடகிலிருந்து சிலகனவான்கள் அவரைக்கண்டு கொள்ள வந்திருந்தார்கள். அப்போது அவர் மைசூரில் மதுவிலக்கு முயற்சியைப்பற்றி அவர்களிடத்தில் சில வார்த்தைகளைப் பேசினார். அவர் சொன்னது என்னவெனில், மைசூர் மாகாண

முழுவதிலும். சிலகாலமாய் மதுவிலக்கு முயற்சி உற்சாகமாய் நடந்தேறி வருகின்றது. கள்ளைக் குடித்து தங்கள் குடும்பங்களைக் கெடுத்துக்கொள்ளுகிற ஜனங்களை சீர்திருத்தம் செய்கிற விஷயத்தில் கிராம பஞ்சாயத்தார் அதிகமான வேலை செய்யக் கூடும். கள் குடியினாலே எத்தனையோ ஜனங்கள் தங்களுடைய தானிய விளைவில் அரைவாசியை அழிவுக்குரிய வட்டிக்குக் குதவை வைத்து நஷ்டப்பட்டுப் போகிறார்களென்று உங்களுக்குத் தெரிந்த காரியம். இப்படிப் பட்டவர்களை விடுதலை செய்வது உங்களுடைய கடமை என்று சொன்னார்.

Drink and Cricket:—பந்தாட்டத்தில் திறமையுடையவரான லார்ட் ஹாக் என்பவர் சிலதினங்களுக்கு முன்னே தமது ஐம்பதாம் ஜனனோற்சவத்தைக் கொண்டாடினார். அந்தச் சமயத்தில் அவர் கூடி வந்திருந்தவர்களுக்குச் சொன்ன புத்திமதியென்னவென்றால் பந்தாட்டம் அநேகம் பேரை சாராயக் கடைகளுக்குப் போகவொட்டாமல் தடுக்கிறது. குடிகாரன் ஒருவன் பந்தாட்டத்தில் திறமைசாலியாய் இருக்கமுடியாது என்பதே.

Abstaining M. P's:—"முன்னேறிச் செல்லும் ஊழியக்காரர்" என்று பேர் வைத்துக்கொண்டிருக்கிற சங்கத்தார் இப்போதிருக்கிற பார்லிமென்டு அங்கத்தார்களில் எத்தனைப் பேர் மதுபானத்தை முற்றும் தவிர்த்திருக்கிறார்கள் என்று அறிய விரும்பி, ஜாபிதா ஒன்று தயார் செய்தார்கள். கூடுமானவரையில் அவர்கள் உண்மையான கணக்கெடுத்ததில் தற்காலம் 128 மெம்பர்கள் மதுபானத்தைக் கொஞ்சமும் தொடாதவர்களென்று கணக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது. இது தவிர, இன்னும் சிலருடைய பெயர்கள் இதனுடன் சேர்க்கப்படுமென்றும் தெரிய வருகிறது. இதனால் 20 வருஷத்துக்குள் பெரிய மாறுதல் உண்டாயிருக்கிறதென்று அறிந்து கொள்ளலாம்.

General News and Notes

பொதுவர்த்தமானக் குறிப்பு.

Church and State in Spain:—ஸ்பெயின் தேசத்து பிரதம மந்திரியைப் பத்திரிகை விகிதர் ஒருவர் கண்டு அவ்விடத்து மார்க்க ஆளுகையைப்பற்றி பேசியபொழுது பிரதம மந்திரி பிற் கூறியவாறு சொன்னதாகத் தெரியவருகிறது. "மார்க்க ஆளுகை விஷயமாய் முடிவான ஒரு ஏற்பாடு செய்துவிட அரசாங்கத்தார் தீர்மானித்திருக்கிறார்கள். பார்லிமென்டிலும் தேசத்திலும் இதற்கு அனுசரணையான கட்சியார் அதிக பேருண்டு. மார்க்கத்தலைவர்களுடைய அதிகாரம் இனி அதிகமாய்ச் செல்லாது. அரசாங்கத்திலே அவர்களுடைய கை இதுவரைக்கும் மேலேயிருந்தபடியால் தேசத்துக்கு எவ்வளவோ யிடையூறு உண்டாயிருக்கிறது. பாப்பானவரும் அவரைச் சேர்ந்தவர்களும் சரித்திரத்தின் மூலமாய் அதைத் தெரிந்துகொண்டு நியாயமாய் நடந்துகொள்ளுவார்களென்று நம்புகிறேன்."

Lord Rosebery's Mission:—விக்டோரியா மகாராணியும் எட்வர்டு மகாராஜாவும் ஆஸ்டிரியா தேசத்தோடு எப்படி நேசமாயிருந்திருந்தார்களோ அப்படியே ஜார்ஜ் மகாராஜாவும் இருக்கிறார் என்கிற விஷயத்தைத் தெரிவிக்கும்பொருட்டு அத்தேசத்துக்கு மகாராஜாவினால் அனுப்பி வைக்கப்பட்ட லார்ட் ரோஸ்பரியை பிரான்ஸிஸ் ஜோசப் சக்கிரவர்த்தியும், அத்தேசத்து பிரஜைகளும் அன்பாய் வரவேற்று உபசரித்தார்கள். அத்தேசத்துப் பத்திரிகைகளும் லார்ட் ரோஸ்பரியின் வருகையினிமித்தம் களிகூர்ந்து இங்கிலாந்துக்கும் ஆஸ்டிரியா ஹங்கரிக்கும் உள்ள சிநேகபாவம் உறுதிப்பட்டது என்று சொல்லிப் புகழ்ச்சியாய் எழுதுகின்றன.

South African Defence:—ஜெனரல் போதா டர்பானில் பேசிய போது, தென் ஆப்பிரிக்காவின் பாதுகாப்புக்காக தாமாகவே ஒரு சேனையை வைத்துக் கொள்வது அவசியமென்றும் நிரந்தரமான ஒரு பெரிய ராணுவத்தை வைத்து பாதுகாக்க வேண்டிய அவசியம் ஏற்படாவிட்டாலும் தாய் நாட்டின் உதவியைத் தேடாமலே தாமே தம் நாட்டைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடிய விதமாய் ஒரு சிறு சேனையை வைத்துக் கொள்ளுவது அவசியமென்றும் இதற்காக டர்பான் என்கிற பட்டணம் கோட்டைக் கொத்தளங்களால் அரண் செய்யப்பட வேண்டுமென்றும் சொன்னார். இந்தப் புதிய பாதுகாப்பு சேனை ஸ்தாபிக்கும்

நோக்கமாய் போதாவும் ஸ்மட்ஸும் கேட்டுக் கொண்டபடி லார்ட் மெத்தியூன் வருகிற 1912௵ எப்பிரல் மாதம் வரைக்கும் ஆப்பிரிக்காவில் தங்கியிருக்கச் சம்மதித்திருக்கிறார். அதே விஷயமாய் ஜானஸ்பர்கில் ஜனரல் போதா பேசுகையில் போயர்களும் இங்கிலீஷ் காரர்களும் சேர்ந்து இந்தராணுவத்தை உண்டாக்க வேண்டுமென்றும். அவ்வாறு அவர்கள் சேர்ந்து உண்டாக்குகிற விஷயத்தில் உலகத்திலுள்ள எல்லா ராணுவங்களைப் பார்க்கிலும் சிரேஷ்டமாயிருப்பார்களென்றும் இதற்காக லார்ட் மெத்தியூனுடைய உதவிமாத்திரமல்ல தம்முடைய பழைய யுத்த சிநேகிதர் லார்ட்கிச்சினருடைய உதவி வேண்டுமானாலும் பெற்றுக் கொள்ளத் தயாராயிருப்பதாகவும் சொன்னார்.

German Crown Prince's Tour:—ஜர்மன் இளவரசர் கீழ் தேசத்தில் செய்ய உத்தேசித்திருக்கிற பிரயாணத்தின் விவரம் பெர்லின் பட்டணத்தில் வெளியாக்கப்பட்டிருக்கிறது. சக்கிரவர்த்திக்கு எடிகாங்காயிருக்கும் ஜெனரல் வான் ஷாங்க என்பவரும் இன்னும் ஆறு பேருங் கூட வருவார்கள். இளவரசர் சிலோனுக்கு வந்த பிறகு டிசம்பர் ௴ 14 தேதியில் பம்பாய் வந்து சேருவார். பிறகு இந்தியா முழுவதும் பிரயாணம் பண்ணி பெப்பிரவரி ௴ 12 தேதி கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு சிங்கப்பூருக்கும் பாங்பாக்குக்கும் போவார், அங்கிருந்து சீனாவிலுள்ள பல இடங்களையும் ஜப்பானிலுள்ள இடங்களையும் பார்த்துக் கொண்டு சைபீரியாவழியாய் மே மாத தொடக்கத்தில் தமது நாடு போய்ச் சேருவார்.

Coronation Arrangements:—அடுத்த வருஷத்தில் நமது மகாராஜாவின் மகுடாபிஷேகத்திற் கான ஏற்பாடுகள் இப்போதிருந்து நடைப் பெற்று வருவதாய்ச் சொல்லப்படுகிறது. அக்காலத்தில் மகத்துவமான ராஜாங்க காட்சி யிருக்கு மென்றும், சகலபிரிடிஷ் நாடுகளிலுமிருந்து திரளான பிரதி நிதிகள் அழைக்கப்படு வார்களென்றும். குடியேற்ற நாட்டு மந்திரிகளும் மற்றும் பிரமுகர்களும் அழைக்கப்படுவதுடன் உலகத்தின் நானாபாகத்தி லிருந்து ராணுவங்களும் தருவிக்கப்படு மென்றும் சொல்லப்படுகின்றது. மகுடாபி ஷேகத்துக்கு முந்தியாவது பிந்தியாவது ஏகாதிபத்திய ஆலோசனை சபை ஒன்று கூடு மென்றும் அறிய வருகிறோம்.

The Late Dr. Maurice Phillips:—47 வருஷகாலம் தென்னிந்தியாவில் இலண்டன் மிஷன் சம்பந்தமாய் மிஷனெரி ஊழியம் புரிந்து, இரண்டு வருஷங்களுக்கு முன்னே சுகவீனத்தினிமித்தம் இங்கிலாந்துக்குத் திரும்பிப் போன கனம் பொருந்திய டாக்டர் மாரீஸ் பிலிப்ஸ் ஐயர் சென்ற மாதத்தில் சௌத் போர்ட்டில் தமது கிருகத்தில் காலஞ் சென்று போனார் எனக் கேட்டுத் துக்கிக்கிறோம். தென்னிந்தியாவுக்கு வந்த ஆரம்ப மிஷனெரிகளில் இவரொருவர். பக்திவைராக்கியத்தோடு உண்மையாய்த் தம் கடமைகளைச் செய்தவர். சென்னையில் தெருப் பிரசங்க வேலையில் இவர் காட்டின முயற்சி யாருங் காட்டினதில்லை. சுதேச ஊழியரிடத்தில் மிகவும் அன்பும் அபிமானமு முடையவர். அவர்களை இவரைப் போல் கண்ணியமாய் நடத்தினவர் அபூர்வ மென்றே சொல்ல வேண்டும். சுதேச சபைகளின் விருத்தியை அதிகமாய் நாடி யுழைத்தார். இவர் மரணத்தின் மூலமாய் இந்திய தேவ ஊழியரும், சுதேச சபைகளும் ஓருமையான மிஷனெரி நண்பனை யிழந்து விட்டார்கள். பர்த்தாவை யிழந்த பிலிப்ஸ் அம்மாளுக்கும், பிரிய பிதாவை யிழந்த, சேலத்திலிருக்கிற மார்ஷல் அம்மாளுக்கும் தேவன் ஆறுதலையும் சமாதானத்தையுங் கட்டளையிடுவாராக.

Temperance Reform in Holland:-உலாந்து தேசத்து மந்திராலோசனை சபையார் சமீபத்தில் செய்த ஒரு சட்டத்தினால் அவ்விடத்து ரெயில்வே ஸ்டேஷன்களில் விஸ்கி, ஜின், பிராந்தி, முதலிய சாராயங்கள் விற்கக் கூடா தென்று தடுத்திருக்கின்றார்கள்.

நசரையார் சதகம்:—ஆண்டவருடைய அருண் மொழிகளின் மேல் நூறு விருத்தங்களடங்கியது. இப் பத்திரிகை தமிழ் எடிட்டரிடங் கிடைக்கும். ஒன்றரை அணா லேபில் அனுப்பிப் பெற்றுக்கொள்க.